# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,125 — 1960 මැයි 6 වැනි සිකුරාදා — 6.5.1960.

12,125 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மே மாதம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 103 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 103 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 107 | நானாவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

எனது எண் ஈபீஎ 21/59.

### ஆசுப்பத்திரி எழுது வினைஞர் பரீட்சை—செப்டம்பர், 1960

1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ம் திகதி வெளியான 12,092 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க அறிவித்தல் சார்பாக, 1959 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவைப் பரீட்சையிற் கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையில் இரண்டாம் வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களென்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | விலாசம் |
|---|---|
| அபயகோன் பண்டா, எச். எம். | தம்பலகப்புவ, கரண்டகொல |
| அல்விஸ், டபிள்யு. பி. | 364, கொங்காவத்த, பொரலஸ்கமுவ |
| தனுசேகர, டபிள்யு. கே. | " விஜிதா ", கட்டுதகந்தை, மொரட்டுவ |
| டிக்ஸன், எம். கே. | நகரசபை, காலி |
| குணதிலக, ஏ. எம். | ஈ 38, அக்கிரியாகல வீதி, பிதிகூயும், கேகாலே |
| கனகரெத்தினம், கே. | 14/2, ஓட்டுமட வீதி, யாழ்ப்பாணம் |
| மில்லவிதானச்சி, எஸ். | தெசோவிற்றவத்த, நாகொட |
| பெரேரா, யீ. வீ. | 70/20, கோவில் வீதி, கொழும்பு 10 |
| பிரேமரெத்தின, யீ. | உடவ தெற்கு, குடஉடவ |
| றூபசிங்க, எம். யீ. டபிள்யு. | அறவாவெல, கிற்றிகேகம |
| சூசைதாஸன், யீ. எஸ். | இல. 6, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம் |
| வாச்ல, சி. பி. | அரம்பொல, மாவத்தகம |

2. பரீட்சார்த்திகளுக்கு உடனடியாக வேலை கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பல்ல. எனினும், காலித்தானங்கள் ஏற்படும்பொழுது நியமனங்கள் வழங்கப்படும். சகல நியமனங்களும் 3 வருடங்களுக்குப் பரீட்சார்த்த நிலையில் இருக்கும். இவர்கள் ஓர் வைத்தியப் பரிசோதனைக்கும் ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவை சம்பந்தமான சேவை நிபந்தனைகளுக்கும் உட்படவேண்டியிருக்கும்.

சௌக்கியப் பகுதி,
த. பெ. இல. 500,
கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 27 ந் உ.

செ. பொன்னம்பலம்,
சௌக்கிய அவை அதிபதிக்காக.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

கிழக்குப் பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் கீழ்க்காணும் வேலைகட்கு அவை ஒவ்வொன்றிற்கும் எதிரேயும் குறிக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடம் இருந்து 1.6.60 காலை 9.30 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) வாகரையில் கனிஷ்ட தொழில் நுட்ப உதவியாளர் வசிக்கும் வீடு கட்டுதல் (ரூபா 23,900)

(2) வாகனேரியில் தொழிலாளர் வசிக்கும் இரட்டை வீடு கட்டுதல் (ரூபா 13,300).

2. இரு பிரதி கொண்ட வெற்றுக்கேள்விப்பத்திரங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடி உறுகாம நீர்ப்பாசன உப பிரிவில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடம் இருந்து 1960 ம் ஆண்டு மே மாதம் 31 ம் திகதி செவ்வாய்க்கிழமை வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் பார்வையிடப்படும். அச் சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் பிரசன்னமாய் இருக்கலாம். கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் பெயரில் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 25 க்குப் பெறுமதியான காசுக்கட்டளையை அல்லது பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. மேற்கொண்டு விபரங்களைக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ஜயசிங்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
உறுகாம உப பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
செங்கலடி, கி. மா.
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 27 ந் உ.

## நீர்ப்பாசன இலாகா

கண்டி பெரும்பாக நீர்ப்பாசன பொறி இயலாளர் அவர்களால் 1960 ம் ஆண்டு ஆனி மாதம் 1 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரையும் நீர்ப்பாசன இலாகாவில், பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து 'நிடிகாவத்தை வேல்யாய அணைக்கட்டு' கட்டுவதற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் 10,500 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவின் மாத்தளை அதிகாரியிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய கேள்விப் பத்திரங்கள் இரு கொப்பியில் அனுப்ப வேண்டும். பத்திரங்கள் 6.5.60 தும் 28.5.60 ற்குமிடையில் பெற்றுக்கொள்ளலாம். நீர்ப்பாசன இலாகாவில் குறிப்பிட்ட தொகையில் பதிவு செய்திருப்பதாயும், 25 ரூபா "டிப்பொசிற்" கட்டியிருப்பதாயும் நிரூபிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே கேள்விப்பத்திரம் வழங்கப்படும். டிப்பொசிற் பணம் நீர்ப்பாசன இலாகா அதிபர் பெயரில், மாத்தளை இளை அதிகாரியின் கந்தோரில் அல்லது எந்தக் கச்சேரியிலும் கட்டலாம்.

கேள்விப்பத்திரங்கள் கண்டி பெரும்பாக நீர்ப்பாசன பொறி இயலாளர் விலாசத்திற்கு, 1960 ம் ஆண்டு ஆனி மீ 1 ம் திகதி காலை 10 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி ரெஜிஸ்டர் செய்து அனுப்பவேண்டும். அல்லது அங்கு வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போட வேண்டும். கேள்விப்பத்திர விண்ணப்பம் செய்பவர் பத்திரம் ஏற்கப்படும் நாள் முதல் மூன்று வாரத்திற்கு விண்ணபத்தை மதிப்பர் என எடுக்கப்படும்.

ஏனைய விபரங்களை 28.5.60 பிற்பகல் 1 மணிவரை மாத்தளை நீர்ப்பாசன அதிகாரியிடம் கோரலாம்.

ச. துரைராஜசிங்கம்,
மாத்தளை உப நீர்ப்பாசன இலாகா அதிகாரி.

## நீர்ப்பாசன இலாகா

கீழே குறிக்கப்பட்டிருக்கும் மகாகணந்தராவ உப பகுதி வேலைகளுக்கு வட மத்திய பிரிவு பெரும் பகுதி நீர்ப்பாசன அதிபர் 1960 ம் ஆண்டு ஆனி மாதம் 9 ம் திகதி காலை 9.30 மணிவரை கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

(நிரந்தர) மேற்பார்வையாளர் இல்லம்—
நாச்சடுவா, (நிரந்தர) தொழிலாளர் குடிசை, வலதுபக்க சுலீஸ், மகாகணந்தராவ.

நீர்ப்பாசன இலாகாவில் ரூ. 16,000, 11,000, 18,000 ஆகிய தொகைகளுக்கோ அல்லது மேலோ பதிவு செய்யப்பட்டவர் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

மிஹிந்தலை-மகா கணந்தராவ உபபகுதி நீர்ப்பாசன அதிபர் அவர்களிடம் இருந்து விண்ணப்பப்பத்திரங்களும் விபரங்களும் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 6 ம் திகதியிலிருந்து 18 ம் திகதி வரை வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் பெறவிரும்பும் விண்ணப்பக்காரர்கள் நீர்ப்பாசன அதிபர், மகா கணந்தராவ காரியாலயத்தில் அல்லது கச்சேரியில் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 25/- முற்பணம் கட்டி பற்றுச்சீட்டு சமர்ப்பித்தால் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். தற்சமயம் வேலை ஒப்புக்கொண்டிருக்கும் விண்ணப்பக்காரர்கள் தாங்கள் வேலை ஒப்புக் கொண்டிருக்கும் உத்தியோகத்தரிடமிருந்து தங்கள் திருப்திபற்றிய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் திறக்கும்போது விண்ணப்பக்காரர்கள் சமூகந்தர அனுமதிக்கப்படுவார்கள்.

டி. வீ. ஏ. சேனாரத்ன,
நீர்ப்பாசன அதிபர்,
மகாகணந்தராவ, உ. ப.

மிஹிந்தலை,
25.4.60.

---

## நீர்ப்பாசன இலாகா

கண்டி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1960 ம் ஆண்டு ஆனி மாதம் முதல் திகதி காலை 10 மணிவரை கீழ்க்காணப்படும் வேலைகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

| வேலைகளின் பெயர் | பதிவுத் தொகை ரூபா | ரெண்டர் பணம் ரூபா |
|---|---|---|
| (1) நவட்காகவத்தகுளம் திருத்துவதற்கு .. .. | 36,000 .. | 50 |
| (2) மெனிக்தென்னகுளம் திருத்துவதற்கு .. .. | 34,000 .. | 50 |
| (3) சறளை கற்கள் (Gravel) பரப்புவதற்கு கந்தலாம திட்டப் பாதையில் .. .. .. | 7,500 .. | 25 |

கேள்விப்பத்திரங்கள் 9.5.1960 ம் திகதியில் இருந்து 31.5.1960 தாம் திகதி வரை இவ்விலாகாவில் மேல்குறிப்பிட்ட தொகைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் என்று நிரூபிப்பவர்களுக்கு நாளந்தை நீர்ப்பாசனக் கந்தோரில் அல்லது ஒரு கச்சேரியில் கேள்விப்பத்திரக் கட்டணம் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றபின் கொடுக்கப்படும்.

அரசாங்கத்தில் தற்சமயம் ஒப்பந்த வேலை செய்துகொண்டிருப்பவர்கள் கேள்விப்பத்திரம் பெறுவதற்கு, அவ்வேலைக்கு பொறுப்பாயுள்ள அதிகாரியிடமிருந்து, அவர்கள் அவ்வேலையை திருப்திகரமாகச் செய்திருந்தார்கள் என்பதை நிரூபிப்பதற்குரிய பத்திரம் ஒன்று பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தோர் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்கள் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், கண்டி அவர்களால் அவரது கந்தோரில் 1.6.1960 காலை 10.30 க்கு திறக்கப்படும்.

மேலதிகமான விபரங்கள் நாளந்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன இலாகா, நாளந்தை,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 26 ந வ.

த. வே. தருமலிங்கம்,
உப பொறியியலாளர், நாளந்தைப் பகுதி.

---

## நீர்ப்பாசன இலாகா

வடபகுதி வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், கீழ்க்காணும் வேலைக்காகிய விண்ணப்பப் பத்திரங்களை இவ்வருஷம் மே மாதம் 24 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி வரையும் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 10,000 க்கும், அதற்கும் மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்வார்.

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திரத்திற்குரிய கட்டுப்பணம் | இலாகாவினால் இனமாகக் கொடுக்கப்படும் பொருட்கள் |
|---|---|---|
| உடையார்குளம் வான் துருசு கட்டும்வேலை.. | ரூபா 25 .. | சீமந்து, துருசு கதவு, சீமந்து குழாய்கள். |

2. விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வருடத்திய மே மாதம் 23 ம் திகதி திங்கட்கிழமை வரையும் வவுனியாப்பகுதி நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் ஏனைய விபரங்கட்கு காரியாலயத்திற்கு நேர்முகமாக வந்தோ, அல்லது மனுச்செய்தோ கோரவும்.

3. தற்சமயம் அரசாங்க ஒப்பந்தங்கள் கைவசம் இருப்பின், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அவ்வேலைகளை திருப்திகரமாகச் செய்யப்படுகிறதென்றும், அத்துடன் வேலைகளின் பெயரும் ஒப்பந்தங்களின் தொகையும், மேற்கூறிய வேலைக்கு விண்ணப்பிக்கும்பொழுது, ஒரு அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிப்பதுடன், மேலும் இவ் அத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடாத வேறு வேலைகளொதுவுங் கைவசமில்லை யென்றும் அத்தாட்சிப்படுத்தவேண்டும்.

வி. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
வவுனியா பகுதி.

1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 27 ந வ.

## உணவுப் பகுதி

சமார் 46,000 பாவனைக்குகந்ததல்லாத சணற்சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 1960 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை உணவு அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இக்காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பம் செய்யப்படவேண்டும். இக்கோரிக்கை சம்பந்தமான விபரங்களடங்கிய பத்திரத்தை உணவு அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மே மீ 2 ந் வ.

---

## கல்விப் பகுதி

கீழ் குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு கல்வி இலாகா கேள்விச்சபை அக்கிராசனர் அவர்களால் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 27 ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலைவிபரம் |
|---|---|
| மட்/தம்பிலுவில் மேற்கு அ. த. க. பாடசாலை .. | பாடசாலை கட்டல் |

குறிப்பு : மட்=மட்டக்களப்பு மாவட்டம்.

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்வி இலாகாவினுலும் பகிரங்கவேலை இலாகாவினுலும் கீழே குறிக்கப்பட்டுள்ள தொகைக்கு பதிவு செய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். மேல் குறிக்கப்பட்ட வேலைக்கு கல்வி இலாகாவில் 17,500 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் அல்லது பகிரங்க வேலை இலாகாவில் 35,000 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். மேற்படி வேலைக்கு விண்ணப்பிக்க விரும்பும் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் கல்வி இலாகாவில் கட்டிட கொந்திராத்து வேலை செய்வதற்கு 35,000 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் (A. C.) கிளை கல்விக்கந்தோரிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக்கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை கீழ் மாகாணக்கல்வி அதிகாரி, அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ந் திகதி பிற்பகல் 3.30 மணி வரையுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். செக்குகள், போஸ்ரல் ஓடர்கள், மணி ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. கேள்விப்பத்திரங்களுக்கு பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் கீழ்மாகாண கல்வி அதிகாரி அவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்களுக்கு மாத்திரமே பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் வழங்கப்படும்.

4. இவ்வேலைக்கு இரண்டாம் பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் கீழ்மாகாணக் கல்வி அதிகாரி அவர்களிடம் பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இரட்டைப்பிரதியில் பதிவு செய்த தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும்.

பதிவுசெய்த தபால்மூலம் அனுப்பவிரும்பாத உள்ளூர் விண்ணப்பக்காரர்கள் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப்பத்திரங்களை வித்தியாதிபதியின் காரியாலய உதவியாளரிடம் சேர்ப்பித்து அவைகளைப்பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின்மீது வேலையின் விபரங்களும் விண்ணப்பக்காரன் பெயரும் விலாசமும் எழுதப்படவேண்டும். கீழ்மாகாணக் கல்விக் காரியாலயத்தில் இவ்வேலைக்குரிய படங்களும், மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

5. 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 27 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்வையிடும்பொழுது விண்ணப்பக்காரர் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பக்காரர்களுக்கு விண்ணப்பத் தொகைகளும் விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக் காட்டப்படும்.

6. விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரையிலுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

7. இவ்வேலைகள் செய்யப்படும்பொழுது, இலங்கையரும் குறிப்பிட்ட வேலைநடக்கும் பிரதேசத்தில் வசிப்பவருமான வேலையாட்களையே அமர்த்த வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத் தவறினால் அத்தவறு ஒப்பந்தச் சரத்துக்களை மீறியதாகக் கருதப்பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படக்கூடும். எனினும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர், கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலைநடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கைவாசியான வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனுமதி அளிப்பர். இந்த அனுமதியில்லாமல் இலங்கையர் அல்லாத வேலையாட்களையோ அல்லது வேலைநடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கைவாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தவிர்க்கப்பட்டுள்ளது.

8. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் ஓடுகள் பாவிக்கவேண்டிய கட்டிடங்கட்கு உள்நாட்டில் தயாரிசெய்யப்பட்ட நல்லரக ஓடுகளையே பாவிக்கவேண்டும். கட்டிடமேற்பார்வையாளர்கள் உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட ஓடுகள் நல்லரகத்தில் பெறமுடியாதென அத்தாட்சிப் படுத்தினாலன்றி, வேறு எவ்வித ஓடுகளும் பாவிக்க அனுமதியளிக்கப் படமாட்டாது. ஓடுகளின் தராதரத்தை நிச்சயப்படுத்த வேண்டிய சோதனைகள் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக்கூடத்தில் விண்ணப்பக்காரர்களின் செலவில் நடத்தவேண்டும். இதுமாத்திரமன்றிதெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள், தாங்கள் உபயோகிக்க இருக்கும் ஓடுகள் சிலவற்றையும் அவ்வோடுகள் சகல பிரமாணங்களுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு அத்தாட்சியாக இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக்கூடத்தின் அத்தாட்சிப்பத்திரம் ஒன்றையும் சமர்ப்பித்து மேற்பார்வையாளர்களின் அங்கீகாரம் பெற வேண்டும்.

சி. தணிகாசலம்,
வித்தியாதிகாரி, மட்டக்களப்பு.

கல்விக் காரியாலயம்,
மட்டக்களப்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 27 ந் வ.

---

## தபாற் தந்திப் பகுதி

### 36,000 இருவழிக் கொங்கிறீற்று நீர்க்குழாய்களை விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

மாதமொன்றுக்கு 3,000 வீதம் 36,000 இருவழி கொங்கிறீற்று நீர்க்குழாய்களை விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள், 1960 ம் ஆண்டு ஆனி மாதம் 7 ந் திகதி மு.ப. 9.30 மணிவரை கொழும்பு, தபால் ஒலிபரப்பு தகவல் அமைச்சுக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப்பகுதி தபாற் கந்தோர்த் தலைவரிடம், கேள்விப் பத்திரப் பொறுப்புப்பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆனி மாதம் 6 ந் திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்ற, இரண்டு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இரண்டு உத்தரவாதிகளை தமது செலவிலேயே தருவதற்கு தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் தேவையானபோது வேண்டப்படுவார்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் கேள்விப்பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை தபாற் தந்தித் தலைமை அதிபதியிடம் காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப்படுவதுடன் ஒப்பந்தத்திற் சேரும்போது உடன்படிக்கையின் முத்திரைச் சட்டப்படி, முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவர்.

கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து குறைந்தது அறுபது (60) நாட்கள் வரை கேள்விப்பத்திரங்கள் ஒப்புக் கொள்வதற்குத் தகுதியான வையாகவிருத்தல் வேண்டும்.

1960 ம் ஆண்டு ஆனி மாதம் 7 ந் திகதி காலை 10 மணிவரை கொழும்பு, தபால் ஒலிபரப்பு தகவல் அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
29.4.1960.

## இலங்கை போக்குவரத்துச் சபை

### விற்பனவு அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்தில் உள்ள கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் பின்வருவனவற்றிற்கு 1960 ம் ஆண்டு மே மாதம் 13 ம் திகதி மு. ப. 10 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

| | | |
|---|---|---|
| (1) | பாவிக்கப்பட்ட ரையர்கள் அளவுகள் 700 × 20 இருந்து 1000 × 20 வரை இவை 300 ஐக் கொண்ட கூறுகளாயிருக்கும். . .. | 23 கூறுகள் |
| (2) | உபயோகிக்கத்தகாத ரியூப்களும் ஒட்டுமடிப்புகளும் | 1 கூறு |
| (3) | வெற்று கொழுப்பு சிறு பீப்பாக்களும் எண்ணெய் பாத்திரங்களும் .. .. | 1 கூறு |
| (4) | (கழிக்கப்பட்ட பஸ்களிலுள்ள) மரம், தகர இரும்பு வேலைப்பாடுகள் .. .. | 4 கூறுகள் |
| (5) | வெற்றுப் பெட்டிகளும் விறகும் .. | 1 கூறு |
| (6) | 45 கலன் பீப்பாக்களில் கழிவு எண்ணெய் (200 பீப்பாக்கள்) .. .. | 1 கூறு |
| (7) | உபயோகிக்கத்தகாத மோட்டார் தனிப் பகுதிகள் | 6 கூறுகள் |
| (8) | உபயோகிக்கத்தகாத பற்றறிகள் (3,600) .. | 1 கூறு |
| (9) | 45 கலன் வெற்று பீப்பாக்கள் (ஒரு கூறில் 800) .. | 2 கூறுகள் |

எல்லா கூறுகளும் இலக்கமிடப்படும். கேள்விகளில் கூறு இலக்கங்கள் குறிக்கப்படவேண்டும்.

கட்டுப்பணங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1, 7, 8, 9 ஆகிய ஒவ்வொரு இனங்களுக்கும் .. | ரூ. 500 |
| 2, 3, 4, 5 ஆகிய ஒவ்வொரு இனங்களுக்கும் .. | ரூ. 100 |
| 6 ம் இனத்துக்கு .. .. | ரூ. 300 |

மீளப் பெற்லக்கொள்ளக்கூடியதான கட்டுப்பணங்களை கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி அதற்காகப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளை கேள்விப் பத்திரத்துடன் இணைக்கவேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில், " உபயோகிக்கத்தகாத இருப்புப் பொருட்களுக்கான கேள்விப் பத்திரம் " என்று தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப்பத்திரகாரர் முடிவு அறிவிக்கப் பட்ட 7 நாட்களுக்குள் முழுத்தொகையையும் கட்டி எடுத்துச் செல்வதற் கான ஒழுங்குகளைச் செய்யவேண்டும். இக்கால எல்லைக்குள் எடுத்துச் செல்லப்படாவிடில் பொருட்களுக்கு கொள்வனவுக்காரரே பொறுப்புடைய வராவார்.

பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை வினியோகப் பகுதி வளவுக்குள் மேற்சொல்லப்பட்டவற்றை பார்வை யிடலாம்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

29.4.1960.
கொழும்பு.

---

## தேர்தல் இலாகா

**சீ.வீ. 1262 ம் இலக்க கொமர் பஸ் வாகனத்தையும் சீ.வீ. 1367 ம் இலக்க போட் வீ.–8 (லொறி) வாகனத்தையும் வாங்குவதற்கான கேள்விப் பத்திரம்**

1. 1960 ம் ஆண்டு மே மாதம் 30 ம் தேதி காலை 9.30 மணிவரை சீ.வீ. 1262 ம் இலக்க கொமர் பஸ் வாகனத்தையும் வீ–8 சீ.வீ. 1367 ம் இலக்க லொறி வாகனத்தையும், வாங்குவதற்கு கேள்விப் பத்திரம் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி வாகனங் களை தேர்தல் அதிகாரியின் கந்தோரில், கந்தோர் நேரத்தில் பரிசீலனைக் குக் கிடைக்கும்.

2. கேள்விப்பத்திரம் சீல் வைத்த உறையிலடைத்து " அரசாங்க வாகனங்களை வாங்குவதற்கான கேள்விப்பத்திரம் " என உறையின் இடதுபுற மேல் மூலையில் எழுதி, தேர்தல் அதிகாரி, 31 கில்பட் கிரஸன்ட், கொழும்பு 7. என்று விலாசமிட்டு அனுப்பவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேர்முகமாகவோ இவ்விலாகாவின் அனுவலக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப் பத்திரங்கள் மேலேயுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரம், தேதிகளுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள், கேள்விதாரரின் சொந்தப் பத்திரத்தில் இரு பிரதிகளாக சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளிலுள்ள மாற்றங் கள், அழித்தல்களுக்கு கேள்விதாரரின் கையொப்பத்தால் உறுதிப் படுத்தல் வேண்டும். கீழ்வரும் பந்தியில் கூறப்பட்டுள்ளபடி கேள்விப் பத்திரத்துக்குரிய கட்டுப்பணத்தின் பற்றுச்சீட்டை, கேள்விப்பத்திரத் தோடு இணைத்தல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரத்துக்குரிய கட்டுப்பணமாக 50 ரூபாவை காசாக தேர்தல் அதிகாரியின் கந்தோரில் இறுத்துக்கொள்ள வேண்டும். இக் கட்டுப்பணத்தின் பற்றுச் சீட்டை கேள்விப்பத்திரத்தோடு இணைத்தல் வேண்டும்.

6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள், கேள்விதாரரால் மீண்டும் வாபஸ்பெற முடியாது.

7. ஒரு கேள்விப்பத்திரத்தையோ, அல்லது எல்லா கேள்விப்பத்திரங் களையோ நிராகரிக்கும் சக்தி அரசாங்கத்திற்கு உரிமையானது. மேற் குறிப்பிட்டுள்ள எல்லா விதிகளையும் சரிவரக் கையாளாத எந்தக் கேள்விப் பத்திரமும் பார்வையிடப்படமாட்டாது.

8. எல்லா கேள்விப்பத்திரங்களும் 1960 ம் ஆண்டு மே மாதம் 30 ம் தேதி காலை 9.35 மணிக்கு தேர்தல் அதிகாரியின் கந்தோர், 31, கில்பட் கிரஸன்ட், கொழும்பு 7, என்ற இடத்தில் திறக்கப்படும். எல்லா கேள்விதாரரும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர், கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் கேள்விப்பத்திரத்திலுள்ள முழுத் தொகையையும் காசாகக் கட்ட ஆயத்தமாயிருத்தல் வேண்டும். அங்ஙனம் அவர் காசு கட்டத் தவறி னால், அவர் தன் கேள்விப்பத்திரத்தின் உரிமையை இழப்பதுடன் கேள்விப்பத்திரத்தின் கட்டுப்பணத்தையும் அரசாங்கத்திற்கு இழந்தவ ராவர். காசு கட்டியவுடன் வாகனத்தை அப்புறப்படுத்துதல் வேண் டும்.

10. மேலதிகமாகத் தகவல்கள் வேண்டுமாயின், கீழ் கையொப்ப மிட்டுள்ளவரின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி.

31, கில்பட் கிரஸன்ட்,
கொழும்பு 7,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 25 ந் உ.

---

## மதுவரிப் பகுதி

**சாராயத்தைப் போத்தல்களில் அடைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள்**

கீழ் குறிக்கப்பட்டிருக்கும் சாராயக் குதங்களில் ஒன்றினிலோ அல்லது அதிகமானவற்றினிலோ ஒரு வருடகாலத்திற்கு சாராயத்தைப் போத்தல் களில் அடைப்பதற்கு கைத்தொழில் மீன்பிடி அமைச்சுப் பகுதியின் கேள்விப்பத்திர சபைத்தலைவரால் 1960 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

| | |
|---|---|
| மட்டக்களப்பு<br>வதுளை | 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 1 ம் திகதி தொடக்கம். |
| களுத்துறை<br>கண்டி<br>யாழ்ப்பாணம் | 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 1 ந் திகதி தொடக்கம். |
| நீர்கொழும்பு<br>திருகோணமலை | 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 1 ந் திகதி தொடக்கம். |

2. மதுவரி அதிகாரியின் காரியாலயத்திலிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். இது சம்பந்த மான சகல விபரங்களையும் மதுவரி அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரி. பி. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

மதுவரி அதிகாரியின் காரியாலயம்,
சவோய் கட்டிடம், வெள்ளவத்தை,
கொழும்பு 6,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 30 ந் உ.

---

## கேள்விப் பத்திரம்

கேகாலை மாவட்ட அரசாங்க அதிபரால் 1960 ம் ஆண்டு மே மாதம் 20 ந் திகதி நண்பகல் 12 மணி வரை, கேகாலை மாவட்டம், பெலிகல் கோறளை காரியாதிகாரியின் பிரிவில் அல்கம கொடவெல வசம்வில் உள்ள " மேபெயர் " என்னும் தோட்டத்தில் ஏறக்குறைய 50 ஏக்கர் விஸ் தீரணமுள்ள காணியில் உள்ள இறப்பர் மரங்கள் வெட்டியெடுப்பதற் கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த இறப்பர், மரங்களுள்ள காணித்துண்டுகளின் இலக்கம் பின்வருமாறு :—2, 5, 6, 7, 9, 11, 17, 20, 21, 22, 23, 24, 27, 29, 30, 32, 39, 40, 41, 42, 43, 44, 45, 47, 49, 50, 51, 52, 53, 58, 60, 62, 79, 84, 86, 87, 88, 92, 98, 100, 104, 106, 107 இக்காணிகளிலிருந்து அனேகமாக 12500 கன யார் விறகு வெட்டியெடுக்க முடியுமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. கொழும்பு–கண்டி வீதியில் 32½ வது மைலில் இருந்து நேராக இக்காணிகளுக்குச் செல்வதற்கான மோட்டார் வண்டிகள் செல்லும் பாதையுமுண்டு. கேள்விப் பத்திரங்களில் எவருடைய கேள் விப்பத்திரம் கூடுதலான கேள்வியுடையதாகவிருக்கிறதோ அவரது விண்ணப்பமே ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இதற்கான கேள்விப்பத்திரங்கள் கேகாலைக் கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். எல்லாக் கேள்விப்பத்திரங்களும் கையெழுத்திட்டு மூடி, கேகாலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு, அட்டையின் இடதுபக்க மேல் மூலையில் "மேபெயர் தோட்டத்திலுள்ள இறப்பர் மரங்கள் வெட்டியெடுப்பதற்கான கேள்விப்பத்திரம்" என்றெழுதி அனுப்புதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள், கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் திகதியன்று முற்பகல் 11 மணிவரையும் 10 ரூபா பணங்கட்டிய பற்றுச்சீட்டு காண்பிக்கப்பட்டதும் கொடுக்கப்படும். இந்தக் கட்டுப்பணம் ஏதாகிலும் ஒரு கச்சேரியில் அல்லது கொழும்பு திறைசேரியில் கட்டியிருக்க வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் கேள்விக்காரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் மூலம் மூடி அட்டையில் "மேபெயர் தோட்டத்திலுள்ள இறப்பர் மரங்கள் வெட்டியெடுப்பதற்கான கேள்விப்பத்திரம்" என்றெழுதி முழு விலாசத்துடன் கேகாலை கச்சேரியில் கொடுக்கவேண்டும்.

5. பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு ஒப்புக்கொண்ட பற்றுச்சீட்டு, கேள்விப்பத்திரங்கள் திறக்கும் திகதி அனுப்பப்படும். எந்தக் கேள்விக்காரருக்கு ஆகுதல் ஒப்புக்கொண்ட பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதியிலிருந்து நான்கு நாட்களுக்குள் கிடைக்காவிடில் அவர் உடனே கேகாலைக் கச்சேரி அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ளவேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரங்கள் மேற்குறிக்கப்பட்ட நேரத்திலும் திகதியிலும் கேகாலைக் கச்சேரியில் திறக்கப்படும்.

7. அங்கீகரிக்கப்படாத பத்திரங்களில் கேள்விப்பத்திரங்களும், அல்லது குறிக்கப்பட்ட நிபந்தனைக்குள் அடங்காதவையுமான கேள்விப்பத்திரங்களும், கேள்விப் பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி வீதங்களும், தொகைகளும், மையினால் தெளிவாக எழுதப்படவேண்டும். அத்துடன் திருத்தங்களெல்லாம் கேள்விக்காரரின் கையெழுத்துடன் இருக்கவேண்டும்.

8. கேள்விப்பத்திரக்காரர் தங்களது முழு விலாசத்தையும் கேள்விப் பத்திரத்தில் எழுதவேண்டும்.

9. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், அரசாங்க அதிபருடன், அவர் தெரிவு செய்யப்பட்டமைபற்றி அறிவிக்கப்பட்ட 20 நாட்களுக்குள், கேள்வி வீதத்தின் முழுத்தொகையையும் செலுத்தி ஒரு ஒப்பந்தம் எழுதவேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் செய்து முடிக்காவிடில் அவரின் பிணைப்பணம் அரசாங்கத்திற்குப் பறிமுதலாக்கப்பட்டு அவரின் பெயர் தவறு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் இடாப்பில் பதிவு செய்யப்படும்.

10. ஒப்பந்தத்தில் ஒட்ட வேண்டிய முத்திரைச் செலவுகளை தெரிவு செய்த கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

11. கேள்விப்பத்திரக்காரர் தங்களது விண்ணப்பங்களை கேள்விப் பத்திரங்கள் முடிவுற்ற திகதியிலிருந்து ஒரு மாதகாலத்திற்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக வைத்துக்கொள்ள வேண்டும்.

12. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் கேள்வி வீதத்தின் முழுத்தொகையையும் செலுத்தி அரசாங்க அதிபருடன் ஒப்பந்தஞ் செய்துகொண்ட பின்னரே அவர்கள் இறப்பர் மரங்களை வெட்டியெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் மேலே குறிக்கப்பட்ட வேலைகளைச் செய்ய இலங்கைப் பிரஜையான பணியாட்களை வேலைக்கமர்த்த வேண்டும். இலங்கைப் பிரஜையென்றால் இலங்கையில் பிறப்பால் அல்லது பதிவால் பிரசாவுரிமை பெற்றவராவர்.

14. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தஞ்செய்யப்பட்ட ஐந்து மாத காலத்திற்குள் இறப்பர் மரங்களை வெட்டியெடுத்துக் கொள்ளவேண்டும்.

15. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர், அல்லது அதற்கென நியமனம் பெற்ற உத்தியோகத்தர், அல்லது உத்தியோகத்தர்கள் மேற்பார்வையிலும், அவர்களின் கட்டளைகளின் வழிகளிலுமே இறப்பர் மரங்களை வெட்டியெடுக்க வேண்டும்.

16. கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர் எந்த ஒரு கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரித்துவிடவோ அவருக்கு உரிமையுண்டு.

17. எந்த வகையான அறிவித்தல்களையும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரில் கொடுத்தாலோ அன்றித் தபால் மூலம் அனுப்பினாலோ அவை அவரிடம் சேர்ப்பிக்கப்பட்டதாகவே கருதப்படும்.

18. ஒப்பந்தக்காரர் அரசாங்கத்திற்கு எதிராக 1934 ம் ஆண்டு 19 ம் இலக்க வேலையாள் நட்ட ஈட்டுச் சட்டத்தின்படி எடுக்கும் எந்த வகையான உரிமைகளுக்கும் நட்ட உத்தரவாதம் பண்ணவேண்டும்.

19. ஒப்பந்தக்காரர் வேலைக்கு நியமிக்கும் ஒரு வேலையாளைப்பற்றி தடைசெய்ய அரசாங்க அதிபருக்கு உரிமையுண்டு.

20. குறித்த தோட்டத்திலுள்ள இறப்பர் மரங்களைப் பார்வையிட விரும்புவோர் தனேவிற்ற, மேபெயர் தோட்ட உயர்தர அதிகாரியுடன் கலந்தாலோசித்து அவரால் குறிக்கப்படும் தினத்தில் பார்வையிடலாம்.

டபிள்யூ. ரி. ஜயசிங்க,
அரசாங்க அதிபர்,
கேகாலை மாவட்டம்.

கேகாலைக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 26 ந் உ.

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## விளம்பரம்

1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 16 ந் திகதி (16–5–60) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் புகையிரத பண்டகசாலையில் மரப் பெட்டிகள், காலியான இரும்புப் பீப்பாக்கள், தகரங்கள் முதலியனவகள் ஏலத்தில் விற்கப்படும்.

விற்கப்பட்ட சாமான்களை மூன்று நாட்களுக்குள் அப்புறப்படுத்தாவிட்டால் நாளொன்றுக்கு வாடகை 50 சத விகிதம் அறவிடப்படும்.

எஸ். ஏ. பி. றூபசிங்கி,
அத்தியட்சர்,
புகையிரதப் பண்டகசாலைப் பகுதி.

கொழும்பு, 25.4.60.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரசல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. 1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.

14. சந்தா விகிதங்கள்—

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது